**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 80/2019**

**Prosecution Witness : 10**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சத்யபிரபா | **Caste** | : |
| **Father's Name** | : பொன்னுசாமி | **Calling** | : நிலக்கோட்டை(AWPS) |
| **Village** | : நிலகோட்டை | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |
| | | **Dated** | : 22.04.2025 |

**22.04.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 11 திருமதி.சத்யபிரபா ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 10 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.</u>**

1. நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.03.2019 ம் தேதி திண்டுக்கல் தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில்இருந்த போது, அன்று காலை 8.30 மணிக்கு திண்டுக்கல் NS நகரை சேர்ந்த பாலத்துரை மகன் சுரேஷ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று திண்டுக்கல் தாலுகா காவல்நிலைய குற்ற எண். 126/2019, சட்டபிரிவுகள் 341, 392 இ.த.ச வாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். காவல்

ஆய்வாளர் என்னை விசாரித்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கின் புகாரில் அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் வழி பறி செய்ததாக தான் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவயிடமானது வத்தலகுண்டு பைபாஸ் சர்வீஸ் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து, தாலுகா காவல்நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்திருந்தால் அரை மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான், ஆனால் புகார் ஒரு நாள் காலதாமதமாக தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 8 நாட்கள் காலதாமதமாக தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தின் அருகே நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தின் சுற்றியுள்ள பகுதியில் CCTV கேமரா அதிகம் உள்ளது என்றால் சரிதான். புகாரில் சொல்லப்பட்டுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை, அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை வைத்து தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW
Digitally signed by SOUMYA MATHEW
Date: 2025.04.22 16:30:35 +0530

Judicial Magistrate No.I
Dindigul.